**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் III செயற்திட்டம் - 2019**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் III செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதிய (309) ஆம் மொத்த இலக்க பிபீசீ (2014) 15 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைகின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மானித்தல் மற்றும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் அதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 76,200 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 590 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 63,356 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 494 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இருப்பினும், செயற்த்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 திசெம்பர் 03 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வீதியின் பிரதான வரிசையிலுள்ள உயர் இழுப்பு மின்சார கம்பத்தினை அப்புரப்படுத்துவதற்கும் ஜயசுமனவத்தை மற்றும் மில்லங்காவத்தை காணிகளின் மீள்குடியேற்ற அபிவிருத்திக்காகவும் ஏற்பட்ட மொத்தமாக ரூபா 8.13 மில்லியன் செலவு செயற்திட்டத்தின் நடைமுறைவேலையின் கீழ் பதியப்படாமல் மாபொல மற்றும் எலகந்த காணிகளில் மூலதனப்படுத்தப்பட்டுள்ளது. | மாபொல மற்றும் எலகந்தவின் கிரயம் தேவையற்ற செலவுகளால் அதிகரிக்கப்பட்டிருந்தன. | ஜயசுமனவத்த மற்றும் மில்லங்காவத்த காணிகளின் மீள்குடியேற்ற அபிவிருத்தி வேலைகள் மற்றும் மாபொல மற்றும் எலகந்த (உஸ்வெடகியாவ) விற்கான காணிகளின் கிரயம் போன்றவற்றிற்கான செலவுகள் காணிவாக்கு பதிவேடு மற்றும் காணி மேம்படுத்தவினூடாக செய்யப்பட்டது. | சொத்துக்களின் பெறுமதியினை சரியாக காட்ட கணக்கீட்டு நியமங்களை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் (கட்டம்-I) இன் ரூபா 1,984 மில்லியன் தொகையான செலுத்த வேண்டியவைகள் 2015 இலிருந்து | நடைமுறை பொறுப்பின் அதிகரிப்பு. | ஓசிஎச்பி கட்டம் I மற்றும் கட்டம் III ஆகியன 2013.07.31 வரை ஒரு செயற்திட்டமாக | அறிக்கையிடல் திகதியில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப்பொறுப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் (கட்டம்-I) இன் செயற்பாட்டு நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொத்துக்களை மாற்றீடு செய்ததன் பின்னர் 2015 இல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | செயற்பட்டிருந்தது. இவ் இரு செயற்திட்டங்களும் 2013.08.01 இல் இரண்டு செயற்திட்ட பணிப்பாளர்களின் கீழ் வேராக்கப்பட்டது. ஓசிஎச்பி கட்டம் III இன் கணக்கில், ரூபா 1,984.0 மில்லியன் ஆரம்பத்திலிருந்து ஓசிஎச்பி கட்டம் I இற்கு செலுத்தவேண்டியதாக காட்டப்படுகின்றது. | சரியான பெறுமதியினை காட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

அதிவேகப்பாதையின் நிர்மானத்திற்கான ஒப்பந்தம் 2013 சனவரி 31 இல் அமைச்சரவை அமைச்சர்களினால் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் வேண்டப்படாத (unsolicited) அடிப்படையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒரு வெளிநாட்டு கம்பனிக்கு ரூபா 66,690 மில்லியன் கிரயத்தில் 2013 பெப்ரவரி 21 இல் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் 2014 ஓகஸ்ட் இல் வேலையை ஆரம்பித்திருந்தும், தொடர்புடைய வேலைகள் அரசாங்க மாற்றம் மற்றும் அதனடிப்படையிலான வேலைப்பரப்பின் மாற்றம் காரணமாக, 16 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2016 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2019 ஜூன் 13 இல் பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்ட வேலைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக 180 நாட்களினால் 2019 திசெம்பர் 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது. நெடுஞ்சாலையின் நிர்மானவேலைகளின் ஒட்டுமொத்த செயலாற்றல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்திகதியில் இலக்கிடப்பட்ட 100 சதவீத்திற்கு எதிராக 96.13 சதவீதமாகவே காணப்பட்டது. இருப்பினும், செயற்திட்டத்தின் மிகுதி வேலைகள் வீதி நிர்மான வேலையின் பூர்த்தியாக்கலிற்கு முன்னர் கடன்காலாவதியின் காரணமாக, பூர்த்தி செய்ய முடியாமல் போகக்கூடும். அதன் பெறுபேறாக, ரூபா 1,417 மில்லியன் பெறுமதியான அதிகளவான ஆரம்பகட்ட வேலைகள் நிதிகளின் குறைபாடு காரணமாக பூர்த்திசெய்ய முடியால் போகக்கூடும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடனின் நடைமுறைப்படுத்திய திகதி 2014 திசெம்பர் 03 ஆக இருப்பினும், கட்டணங்களின் ஆரம்பிப்பு வேலைப்பரப்பு மாற்றம் மற்றும் உள்நாட்டு நிதியிலிருந்தான 5 சதவீத முற்பண கொடுப்பணவில் தாமதம் காரணமாக 2015 திசெம்பர் 30 வரை தாமதமடைந்திருந்தது. அதன் பெறுபேறாக, ரூபா 91.63 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | நெடுஞ்சாலைகளின் அமைச்சர் 2015 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்தினை மீளாய்வு செய்ய இரண்டு குழுக்களை நியமித்திருந்தார், அதில் ஒரு குழு வேலைப்பரப்பினை குறைக்க அறிவுறுத்தியிருந்ததுடன் இறுதியாக ஒரு துணை உடன்படிக்கை ஆர்டிஏவிற்கும் திருத்தப்பட்ட வேலைப்பரப்பின் ஒப்பந்ததாரரிற்கும் இடையே 2015.12.23 இல் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஒப்பந்த கூட்டு பெறுமதியில் 5 சதவீதம் ஒரு உள்நாட்டு பங்காக ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பினை சரியாக அடையாளம் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் தேவையற்ற கிரயங்களை குறைக்க சரியான திட்டத்தினையும் பராமரிக்க வேண்டும். |
| (ஆ) | உபபிரிவு 73.2, ஒப்பந்த உடன்படிக்கையின் தொகுதி II இல் ஒப்புதலலிக்கப்பட்ட உள்நாட்டு வரி நிபந்தனையின் பிரகாரம், ஒப்பந்ததாரர் வேலை வழங்குனரின் நாட்டில் அவரது இலாபத்தின் அடிப்படையில் அவருக்கு அட்டுறுவாக்கப்பட்ட கம்பனி மற்றும் தனியார் வரியினை மீளப்பெறவோ அல்லது வரிவிலக்குப்பெறவோ தகுதியுடயவரல்ல. இருப்பினும், செயற்திட்டமானது வருமான வரி வீதங்களினின் அதிகரிப்பின் காரணமாக ரூபா 359.46 மில்லியன் தொகையான வருமான வரியினை ஒரு ஒப்பந்ததாரர் கொடுப்பனவாக மீளப்பெற நடவடிக்கை எடுத்திருந்தமை மேற்கூறிய ஒப்பந்த நிபந்தனை மற்றும் பகுதி II இல் அதனடுத்து | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உபபிரிவு 70.5, பகுதி II இல் அதனடுத்து உருவான சட்டம், குறித்த விண்ணப்பங்களின் நிபந்தனைகள் போன்றவற்றிற்கு இணங்க, ஒப்பந்ததாரர் சட்டங்களின் மாற்றம் காரணமாக வருமான வரி கொடுப்பனவின் மீது ஏற்பட்ட மேலதிக கிரயத்திற்கு மாத்திரமே தகுதியானதுடன் அது மீளப்பெறப்பட்டும் இருந்தது. | வருமான வரிச்சட்டம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுடன் உடன்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தோன்றும் சட்டத்தின் உபபிரிவு 70.5, ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட விண்ணப்பங்களின் நிபந்தனைகளிற்கு முரணாக காணப்பட்டது.

**3.3 குறைவாக பயன்னபடுத்தப்பட்ட வளங்வள்**

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மொத்த கடன் ஒதுக்கீட்டில், மொத்த கடன் ஒதுக்கீட்டில் 23.38 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 20,926 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 115.49 வேலைப்பரப்பு மாற்றம், ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்ட வேலைளின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் காணி கொள்வனவு நடவடிக்கைகளில் தாமதம் போன்ற காரணங்களினால் கடன் காலாவதி திகதியான 2019 திசெம்பர் 03 இல் கூட செயற்திட்டத்தினால் பயன்படுத்தாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மொத்த வேலைப்பரப்பினையும் பூர்த்திசெய்வதற்கு சாத்தியமில்லை. | கடன் 2014.12.03 இல் பயன்படுத்தக்கூடியதாக இருந்தும், கட்டுமான வேலைகள் 2016.01.01 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | கடன் வசதிகள் கலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடனினையும் பயன்படுத்த செயற்திட்டத்தின் நிர்மான வேலைகளை முறையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஜுன் தொடக்கம் செப்தம்பர் வரையான காலப்பகுதிக்கான ஒப்பந்ததாரரின் 20,21,22 மற்றும் 24 ஆம் இலக்க இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் 2018 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு கடனுக்கான பாதீட்டு ஏற்பாடுகளின் குறைபாடு காரணமாக கொடுத்து தீர்க்கப்படாமல் காணப்பட்டது. அதன் பெறுறோக மொத்தமாக ரூபா 40.58 மில்லியன் ஒப்பந்ததாரரின் வட்டி கொடுப்பனவிற்கான தீர்ப்பனவிற்காக 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட வேண்டியிருந்தது. | தாமத கொடுப்பனவுகள் மீதான வட்டிக்கிரயங்களின் அதிகரிப்பு. | உரிய ஐபீசி க்கள் குறைந்த ஒதுக்கீடுகள் அல்லது பாதீட்டு ஏற்பாடுகள் காரணமாக கொடுப்பனவுகளிற்காக கடன் வழங்குனர் ஐபீசி களை சமர்ப்பிக்காததனால் தாமதமாக இருந்தது. | ஒப்பந்ததாரரின் பட்டியல்களை உரிய நேரத்தில் கொடுத்து தீர்க்க கொடுப்பனவுகளிற்கான ஒதுக்கீடு செயற்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வத்தளை மற்றும் மகர பிரதேச செயலகங்களின் கண்கானிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள 234 அரச காணிததுண்டுகள் உள்ளடங்களாக 1,706 காணித்துண்டுகள் வீதி நிர்மான நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,431.07 மில்லியன் தொகையான இழப்பீடுகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதன்மீது செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வட்டித்தொகை ரூபா 968.22 மிலலியன் இழப்பீட்டு கொடுப்பனவுகளின் தாமதம் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், 415 காணித்துண்டுகளின் உரிமைத்துவம் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | இழப்பீடுகளின் தாமதத்தின் மீதான வட்டிக்கிரயம் அதிகரிக்கும். | வட்டி கொடுப்பனவுகள் செயற்திட்டத்தில் முற்பணங்களின் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்ட தரப்பினர்களிற்கு பிரிவு 17 இன் தாமதத்தின் கொடுப்பனவுகள் செய்ய வேண்டியிருந்தது. பிரிவு 44 இனை வெளியிடுவதில் ஒரு தாமதம் காணப்பட்டதுடன் தற்போது வரை 415 துண்டுகளின் உரிமை ஆர்டிஏ விற்கு மாற்றப்பட்டுள்ளது. | ஒதுக்கீடுகள் மற்றும் தேவையான முற்பணம் இழப்பீடுகளை தீர்ப்பனவு செய்யவும் காணி சுவீகரிப்பு திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யவும் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஜயசுமனவத்தயிலுள்ள 2.43 ஹெக்டயர் காணியளவு மீள்வழங்கள் நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் ரூபா 96.19 மில்லியன் கிரயத்தில் 2014 இல் பெறுகை செய்யப்பட்டிருந்ததன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 36 குடும்பங்களிடமிருந்து தவனை அடிப்படையில் | மொத்த காணி கிரயத்தில், மொத்தமாக ரூபா 77.35 மில்லியன் 27 குடும்பங்களிடமிருந்து அறவிடமுடியாமல் போகக்கூடும். | ஜயசுமனவத்தையில் 36 காணித்துண்டுகள் காணப்பட்டதுடன் தற்போது வரை 09 நபர்கள் மாத்திரமே காணித்துண்டுகளிற்கு கொடுப்பனவு செய்திருந்தனர். எனவே கடவத்தை இடமாறலிற்கான மேலதிக கொள்வனவு காரணமாக மீள்குடியமர்த்தப்பட்ட மக்களிற்காக மீகுதி காணித்துண்டுகளை நாங்கள் மீள ஒதுக்கியிருந்தால் | செயற்திட்டத்தினை மூடுவதற்கு முன்னர் மிகுதி காணித்துண்டுகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | துண்டுகளிற்கான கிரயத்தினை மீளப்பெற செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 8 குடும்பங்களிடமிருந்து மொத்தமாக ரூபா 18.84 மில்லியன் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் மீளப்பபெறப்பட்டிருந்தது. | | செயற்திட்டமானது அவர்களிற்கு முழுமையாக இழப்பீடு செய்யாததால் காணித்துண்டுகளிற்கு கொடுப்பனவு செய்ய அவர்கள் சில காலத்தினை கோரி இருப்பர். | |
| (இ) | பெஹெலியகொட - புத்தளம் வீதிக்கு அருகில் ஏ3 இடமாறலினை நிர்மானிப்பதற்கு மதுமகலவில் 27.02 ஹெக்டேயர் காணியை கொள்வனவு செய்ய செயற்திட்டதிற்கு ரூபா 22.31 மில்லியன் ஏற்பட்டிருப்பினும், செயற்திட்டமானது மதுமகலவிலுள்ள இடமாறலினை அதனடுத்து ரத்துசெய்திருந்ததுடன் கடவத்தையில் ஒரு புதிய இடமாறலினை அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் பெறுபேறாக, ஏ3 இடமாறவிற்காக மதுமகலவிலுள்ள காணியை கொள்வனவு செய்ய ஏற்பட்ட கிரயம் ரூகப 22.31 மில்லியன் ஒரு பலனற்றதாக போய் காணப்பட்டது. | ஏற்பட்ட செலவுகள் பலனற்றதாக போகும். | உண்மையான வடிவமைப்பில் அதிவேகப்பாதையிலிருந்து ஏ3 வீதிக்கு ஒரு உள்வருகையும் வெளியேறலும் காணப்பட்டது. பின்னர் ஏ3 வீதியிலிருந்து 900 மீற்றர் அப்பால் பக்கத்தில் கெரவலபிட்டிய இடமாறல் அமைந்திருந்ததால் நாங்கள் ஒரு உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் வழங்கியிருந்ததால் சில வடிவமைப்பு தேவைப்பாடுகள் திருப்பியுற்றிருக்காமை அடையாளப்பட்டிருந்தது. இருப்பினும், ஈஔம்&எம் பிரிவு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு தேவைப்பாட்டிற்காக ஒரு கட்டிடத்தை வைத்துக்கொள்வதற்காக அவர்களிற்கு ஓர் காணி தேவைப்பட்டதனால் அவர்கள் ஓர் கண்காணிப்பில் இருந்ததுடன் இக்காணி எதிர்காலத்தில் அந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும். | நட்டங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |